# දිස්ත්‍රික් ලේකම් කාර්යාලය - වවුනියාව
# மாவட்ட செயலகம் - வவுனியா
# District Secretariat - Vavuniya




ආයතනයේ නම:- **දිස්ත්‍රික් ලේකම් කාර්යාලය - වවුනියාව**

පාර්ලිමේන්තුවේ රජයේ ගිණුම් පිළිබඳ කාරක සභාව විසින් සභාගත කරන ලද වාර්තා සම්බන්ධයෙන් ස්ථාවර නියෝග අංක 119(4) යටතේ ගරු ආයතන භාර අමාත්‍යවරයාගේ නිරීක්ෂණ හා ගනු ලබන පියවර පාර්ලිමේන්තුව වෙත ඉදිරිපත් කිරීම

நிறுவனத்தின் பெயர்: **மாவட்ட செயலகம், வவுனியா**

பாராளுமன்றத்தின் அரச கணக்குக் குழுவினால் முன்வைக்கப்பட்ட அறிக்கை தொடர்பாக நிலையியற் கட்டளை இலக்கம் 119(4) இன் கீழ் கௌரவ அமைச்சரின் அவதானிப்புக்களும் மற்றும் அது தொடர்பாக எடுக்கப்படும் நடவடிக்கைகளும் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்தல்.

# 2021

Name of the Institution:- **District Secretariat – Vavuniya**

Submission of observations of Hon.Minister and steps taken with regard to the reports tabled by the Parliamentary Committee on Public Accounts in terms of Standing Order No.119(4)

**இலங்கை பாராளுமன்றத்தின் அரச கணக்கு தொடர்பாக செயற்குழுவின் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்ட நிலையில் கட்டளை (119/4) தொடர்பாக அவதானிப்புக்கள் மற்றும் எடுக்கப்படும் நடவடிக்கைகள் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்தல்.**

பாராளுமன்ற தொடர் இல 290
மாவட்ட செயலகம் வவுனியா

| இல | அரச கணக்கு செயற்குழுவினால் காட்டப்பட்ட குறைபாடுகள் மற்றும் வழிகாட்டல்கள் | கணக்கீட்டு அலுவலரால் எடுக்கப்பட்ட செயற்பாடுகள் மற்றும் வழிகாட்டல்கள் | தற்போதய முன்னேற்றம் |
|---|---|---|---|
| 1 | கிடைக்கின்ற காசோலை காசுக்கட்டளைகள் ஆகியவற்றிற்கான பதிவேடு கால அடிப்படையில் பராமரிக்கப்படவில்லை | பதிவேட்டினை நாளது வரைப்படுத்தி பராமரிப்பதற்கு உரிய அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. | காசு மற்றும் காசுக்கட்டளைக்கான பதிவேடு (GAM 83)நாளதுவரைப்படுத்தி உரியவாறு பராமரிக்கப்பட்டு வருகின்றது. |
| 2 | மேற்படி சுற்றிக்கையின் 13ம் பந்தியின் பிரகாரம் சுற்றறிக்கையின் ஏற்பாடுகள் நடைமுறைப்படுத்தப்படுதல், இணைப்பாக்கத்திலும் செய்யப்படுவதற்காக பொருத்தமான ஒருவரை நியமித்து கொம்ரோலர் நாயகம் அலுவலகத்திற்கு அறிவிக்கப்படாமை. | ஒரு பொருத்தமான உத்தியோகத்தரை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகிறது. | சொத்து முகாமைத்துவ 01/2017 சுற்றுநிருபத்திற்கு அமைய பிரதம கணக்காளர் அவர்களை பொருத்தமான அலுவலராக நியமித்து GA/VA/FIN/07/ASN/2021ஆம் இலக்க 2021.03.26திகதிய கடிதம் கொம்ரோலர் நாயகத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. |
| 3 | ஒரு வாகனம் பாவனையிலிருந்து ஒதுக்கப்பட்டு 8 மாதத்துக்கும் குறைவான காலப்பகுதியில் அகற்றப்படவில்லை. | 252-9900 மற்றும் 252-9899 இலக்கம் கொண்ட இரு வாகனங்களும் உள்நாட்டலுவல்கள் அமைச்சின் HA/05/05/17 இலக்க 2021.11.10 திகதிய கடிதத்திற்கு அமைவாக நீர்ப்பாசன திணைக்களத்திற்கு 2021ம் ஆண்டில் கையளிக்கப்பட்டுள்ளதுடன் மேலும் 17-8519இலக்க வாகனம் ஏல விற்பனையின் பொருட்டு மோட்டார் போக்குவரத்து திணைக்களத்திடம் பதிவினை நீக்கம் செய்ய விண்ணப்பிக்கப்பட்டு 2023.12.28ம திகதி மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தினால் | அகற்றப்பட்ட வாகனங்களை ஏலவிற்பனை செய்வதற்கான அனுமதி பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரினால் கடித இலக்கம் HA/F/15 Dispose/Commmon/2024 2024.04.19 திகதிய் கடிதம் மூலம் அனுமதி வழங்கியுள்ளார். மற்றும் பொது நிதி சுற்றுநிருபம் 01/2020 ற்கு அமைய வாகனத்தினை ஏலவிற்பனை செய்வதற்கு 2024.05.02 பத்திரிகை மூலம் கேள்வி கோர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. . |

| | | | |
|---|---|---|---|
| 5 | | பதிவு இரத்துச் செய்யப்பட்டுள்ளது. | |
| 4 | மனிதவள அபிவிருத்தி திட்டங்களை தயாரிக்கவும் கொள்திறன் மற்றும் திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களை அமுலாக்குவதற்கும் நிறுவனத்தில் சிரேஸ்ட அலுவலர் ஒருவர் நியமிக்கப்பட்டிருக்கவில்லை. | மனிதவள அபிவிருத்தி திட்டத்தை தயாரிப்பதற்கான ஒரு சிரேஸ்ர அலுவலரை நியமிக்க ஏற்கனவே நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | GA/VA/EB/06/TR/HRDP/21 10.02.2021திகதிய கடிதத்தின் மூலம் தி.திரேஸ்குமார் மேலதிக மாவட்ட செயலாளர்/ மேலதிக அரசாங்க அதிபர் அவர்களை 2021.02.10 இருந்து மனித வள அபிவிருத்தி திட்டத்தை தயாரித்தல் மற்றும் ஒருங்கிணைப்பதற்காக எமது அலுவலகத்தில் சிரேஸ்ர அலுவலர் நியமிக்கப்பட்டு அதன் விபரங்கள் பொதுநிர்வாக மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. |
| 5 | இனங்கானப்பட்ட சேவை இலக்குகளை அடைவதை அளவிடுவதற்கான முறைமையியல் ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை | இனங்கானப்பட்ட சேவை இலக்குகளை அடைவதற்கு அளவிட ஒரு முறைமை வடிவமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | GA/VA/FOB/KPI/02/19/23 ஆம் இலக்க 2023.06.22ஆம் திகதிய கடிதம் மூலம் ஒரு குழுவினை நியமித்து இனங்காணப்பட்ட சேவை இலக்குகளையும் அளவீடுகளையும் அடைவுமட்டத்தினையும் இனங்கண்டு சேவை இலக்குகளை அடைவதற்கும் மதிப்பீடு செய்வதற்கும் அக் குழுவினால் 2023.06.22, 23,28 மற்றும் 2023.07.07 இத் திகதிகளில் பிரதேச செயலகங்களில் விழிப்புணர்வு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதற்காக தனித்தனி மதிப்பீடுகளிற்கான ஒரு முறைமை தயாரிக்கப்பட்டுள்ளது. மேலும் வவுனியா வடக்கு, வவுனியா தெற்கு மற்றும் வெங்கலச்செட்டிக்குளம் ஆகிய பிரதேச செயலகங்களின் சேவைச்சுட்டியை (Key Performance Indicator) அளவீடு செய்யும் நடவடிக்கை நிறைவுபெற்றுள்ளதுடன் வவுனியா பிரதேச செயலகத்தில் மட்டும் முதன்மை செயற்பாட்டு குறிகாட்டிகளை அளவீடு செய்யும் |

| | | | |
|---|---|---|---|
| | | | நடவடிக்கை தற்போது நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது |
| 6 | மீளாய்வு ஆண்டின் செயற்திறன் நோக்கம் (செயற்பாட்டுத்திட்டம்) குறிப்பிட்ட திகதிக்குள் சமர்ப்பிக்கப்படவில்லை. | செயற்பாட்டுத்திட்டத்தின் வினைத்திறனின்மைகளை நீக்க சரியான நடவடிக்கை எடுக்கப்படும். | 2022ம்,2023 மற்றும் 2024ம் ஆண்டிற்கான செயற்பாட்டுத் திட்டம் உரிய காலத்தில் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டது. |
| 7 | இனங்கண்ட செயல்சுட்டியின் அடைவு 24% ஐ விட குறைந்த மட்டத்தில் நிலவியது. | பொருத்தமான அயைாளப்படுத்தப்பட்ட குறிகாட்டிகளை இனங்கண்டு முன்னேற்ற நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | தற்போது அடையாளங்காணப்பட்ட செயற்சுட்டியின் அடைவ மட்டத்தை திருப்திகரமான மட்டத்திற்கு முன்னேற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. GA/VA/FOB/KPI/02/19/23 ஆம் இலக்க 2023.06.22ஆம் திகதிய கடிதம் மூலம் ஒரு குழுவினை நியமித்து இனங்காணப்பட்ட சேவை இலக்குகளையும் அளவீடுகளையும் அடைவுமட்டத்தினையும் இனங்கண்டு சேவை இலக்குகளை அடைவதற்கும் மதிப்பீடு செய்வதற்கும் அக் குழுவினால் 2023.06.22, 23,28 மற்றும் 2023.07.07 இத் திகதிகளில் பிரதேச செயலகங்களில் விழிப்புணர்வு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதற்காக தனித்தனி மதிப்பீடுகளிற்கான ஒரு முறைமை தயாரிக்கப்பட்டுள்ளது. மேலும் வவுனியா வடக்கு, வவுனியா தெற்கு மற்றும் வெங்கலச்செட்டிக்குளம் ஆகிய பிரதேச செயலகங்களின் சேவைச்சுட்டியை (Service Indicator) அள்வீடு செய்யும் நடவடிக்கை நிறைவுபெற்றுள்ளதுடன் வவுனியா பிரதேச செயலகத்தில் மட்டும் முதன்மை செயற்பாட்டு குறிகாட்டிகளை அளவீடு செய்யும் நடவடிக்கை தற்போது நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது |

| | | | |
|---|---|---|---|
| 8 | திட்டமிடப்பட்ட பயிற்சி வாய்ப்புக்கள் மூலமாக வழங்கப்பட்டிருந்த பயிற்சி வாய்ப்புக்களின் அளவு 50% ஐ பார்க்கிலும் தாழ்ந்த மட்டத்திலேயே நிலவியது. | கொவிட்-19 ன் நிலமை காரணமாக திட்டமிட்ட பயிற்சி வாய்ப்புக்களை நடத்த முடியாது போயுள்ளது. | தற்போது செலவீனக் கட்டுப்பாடு தொடர்பாக தேசிய பாதீட்டு திணைக்களத்தால் வெளியிடப்பட்ட சுற்றுநிருபங்கள் 02/2022,02/2023 மற்றும் NBD/01/2024 ற்கு இணங்க அலுவலர்களின் சேவைப் பிரமாண குறிப்பிற்கு அமைய அத்தியவசியமாக வழங்க வேண்டிய பயிற்சிகள் மாத்திரம் வழங்கப்படுகின்றது. |

ப.அ.சரத்சந்ர
மாவட்ட செயலாளர்/ அரசாங்க அதிபர்
மாவட்ட செயலகம்,
வவுனியா.

ப.அ.சரத்சந்ர
மாவட்ட செயலாளர்/அரசாங்க அதிபர்
வவுனியா.

அ.சி.சசிகரன்,
பிரதம கணக்காளர்,
மாவட்ட செயலகம்,
வவுனியா.

அ.சி.சசிகரன்,
பிரதம கணக்காளர்,
மாவட்டச் செயலகம்,
வவுனியா

## செயலாளரின் பரிந்துரை

மாவட்ட செயலாளரினால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பரிந்துரை செய்யப்பட்டுள்ளதுடன் அடையாளம் காணப்பட்ட குறைபாடுகளுக்கு தனிப்பட்ட கவனம் செலுத்தி அவற்றை நிவர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகளை எடுக்குமாறு மாவட்ட செயலாளரிக்கு ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளது.

Pradeep Yasarathna
Secretary
Ministry of Public Administration, Home Affairs,
Provincial Councils & Local Government
(Home Affairs Division)
"NILA MEDURA" Elvitigala Mawatha, Colombo 05

பிரதீப் யசரத்ன

செயலாளர்

பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள்,

மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

## அமைச்சரின் பரிந்துரைகள் மற்றும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்

அரசாங்க கணக்குக்குழு மூலம் மாவட்ட செயலாளரிற்கு வழங்கப்பட்டிருக்கும் ஆலோசனைகளுக்கு சிறப்பு கவனம் செலுத்தி, அக்குறைபாடுகள் மீண்டும் ஏற்படாமல் இருக்க தேவையான நடவடிக்கைகளை எடுக்க அமைச்சின் செயலாளரிற்கு நான் அறிவுறுத்தியுள்ளதுடன், அச்செயற்பாடுகள் மூலம் 2024 ஆம் ஆண்டிற்குள் அதன் அடைவு மட்டத்திலிருந்து உயர் மட்டத்தை எட்ட முடியும் என்று எதிர்பார்க்கின்றேன்.

கௌரவ தினேஸ் குணவர்தன (பா.உ.)

பிரதம அமைச்சர் மற்றும்

பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்